May 2020

# Chezhumai

## World Needs Green Recovery

During this pandemic we all learnt that the world needs green recovery. Health experts tell the leaders across the globe to prioritize investment in public health, clean air, clean water and a stable climate in order to boost resilience against future health crises. We all know that the world is growing rapidly, pollution on air, soil and water is increasing greatly choking the environment which is main cause for global warming and climate change and that causes health issues. Working continuously practicing agroforest, prudent use of land and natural resources for growing trees and practicing conservation farming is best act towards global warming mitigation. TIST Small Groups are leaders in this work with TIST support. We encourage you all to continue to follow the best practices on health care and growing agroforest.



மே 2020

# செழுமை

## உலகத்திற்கு பசுமை மீட்பு தேவை

இந்த சர்வதேச நோய் தொற்று காலத்தின் பொழுது உலகிற்கு பசுமை மீட்பு தேவை என்பதை நாம் அனைவரும் அறிந்தோம். சுகாதார வல்லுநர்கள் உலகெங்கிலும் உள்ள தலைவர்களிடம் பொது சுகாதாரத்தில், சுத்தமான காற்று, சுத்தமான தண்ணீர் மற்றும் ஒரு நிலையான காலநிலை போன்றவற்றில் முதலீடு செய்ய முன்னுரிமை அளிக்கச் சொல்கிறார்கள், ஏனெனில் இவைகள் எதிர்கால சுகாதார நெருக்கடியான நேரங்களில் விரைவாக மீட்க உதவும். உலகம் வேகமாக வளர்ச்சியடைகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம், இதனால் காற்று, மண் மற்றும் நீர் மீது பெரும் மாசுபாடு ஏற்படுகிறது, இது புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு முக்கிய காரணமாகும், மேலும் இது சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. தொடர்ந்து வேளாண்காடு வளர்ப்பு கடைப்பிடிப்பது, மரங்கள் மற்றும் சிறந்தமுறை விவசாயம் செய்வதில் நிலம் மற்றும் இயற்கை வளங்களை விவேகத்துடன் பயன்படுத்துவது ஆகியவை புவி வெப்பமடைதலைக் குறைப்பதற்கான சிறந்த செயலாகும். TIST சிறு குழுக்கள் TIST ஆதரவுடன் இந்த வேலையில் தலைவர்களாக இருக்கிறீர்கள். சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் வேளாண் காடுகள் பற்றிய சிறந்த நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்ற உங்கள் அனைவரையும் ஊக்குவிக்கிறோம்.


**TIST Tree Planting India Pvt. Ltd**
Flat A, Plot 69, 26th Street, Sankar Nagar, Pammal, Chennai 600075.
Mobile : 9840299822
Email: josephrexontist@gmail.com
Skype: a.joseph.rexon
Web: www.tist.org


**The International Small Group & Tree Planting Program**

TIST - Planting Trees and Improving Agriculture for Better Lives

டிஸ்ட், மரங்களை நடவு செய்தல் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கு விவசாயத்தை மேம்படுத்துதல்

## Ways to reduce Reed (Korai Reed)

Plough the land that has Korai Reed and sow horse gram

While the horse gram grows the growth of Korai Reed roots will reduce

For one acre land Korai Reed four kilogram horse gram can be sowed

Other grains can also be cultivated in the same land

Sowing horse gram twice would reduce the growth of Korai Reed

When the horse gram grows, during flowering time plough the land along with horse gram

If ploughing along with Korai Reed practice is done two or three times Korai Reed can be controlled.

## கோரைக்கிழங்கு / கோரைப்புல் இதை குறைப்பதற்கான வழிமுறைகள்

கோரைக்கிழங்கு / கோரைப்புல் உள்ள நிலத்தை இரண்டு முறை உழுது கொள்ளு விதைக்கவும்

இந்த கொள்ளு வளர வளர அதன் கீழ் உள்ள கோரைக்கிழங்குகளின் வளர்ச்சி குறையும்

ஒரு ஏக்கர் கோரைக்கிழங்கு / கோரைப்புல் உள்ள நிலத்திற்கு நாலு கிலோ கொள்ளு விதை தேவைப்படும்

இத்துடன் நவதானியங்களையும் விதைக்கலாம்

நிலத்தில் இரண்டு போகம் கொள்ளு விதைத்தால் கோரைக்கிழங்கு / கோரைப்புல் வளர்வதை கட்டுப்படுத்தலாம்

கொள்ளு வளர்ந்தவுடன் பூப்பூக்கும் பருவத்தில் நிலத்தை மீண்டும் உழவு செய்ய வேண்டும்

இவ்வாறு இரண்டு அல்லது மூன்று முறை செய்தால் கோரைக்கிழங்கு / கோரைப்புல் முளைப்பதை கட்டுப்படுத்தலாம்



## Amutha Small Group – Kilsathamangalam, Tiruvannamalai District

Amutha Small Group members are following the best practices of TIST in monitoring the trees at Vandhavasi Center, Kilsathamangalam Village. The members of this small group say that they are following the natural way in practicing farming, we are using vermicompost for trees, and during leaf based diseases on the trees we use mixture of cow dung ash and thermal powerplant fly ash to treat the disease, this helps in protecting the leaves from erosion due to insects. We are also practicing intercrops in between the trees and protecting the moisture in the soil. We are following the best practices in farming. The members of this small group are participating in Node Meetings without fail and receiving tree stipend for their trees.

## அமுதா சிறுகுழு - கீழ்சாத்தமங்கலம் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்

வந்தவாசி மையம் கீழ்சாத்தமங்கலம் கிராமத்தில் அமுதா சிறுகுழுவானது இயற்கை முறையில் டிஸ்ட்-ன் மூலம் மரக்கன்றுகளை சிறப்பாக வளர்த்துவருகின்றனர். சிறுகுழு உறுப்பினர்கள் கூறுகையில் ‘நாங்கள் இயற்கை முறையின் மூலம் விவசாயம் செய்து வருகின்றோம் அதுமட்டுமல்லாமல் மரக்கன்றுகளுக்கு மண்புழு உரம் இடுதல், இலைகளில் பூச்சி அரிப்பு இருக்கும் நேரத்தில் அதை தடுக்க வரட்டி சாம்பல் மற்றம் அனல் மின்சார உற்பத்தி சாம்பல் கலந்து மரக்கன்றுகளுக்கு இடுகின்றோம். இதனால் பூச்சி அரிப்பானது தடுக்கப்படுகிறது அதுமட்டுமல்லாமல் மரக்கன்றுகளுக்கு இடையே ஊடுபயிர்களை வளர்த்து மண்ணின் ஈரப்பதத்தை காத்துகொள்கின்றோம். சிறந்த விவசாய முறைகளை கடைபிடித்து வருகின்றோம்’. இவர்கள் டிஸ்ட்-ன் அனைத்து கணுக் கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு டிஸ்ட்-ன் இடைவிடாது ஊக்கத்தொகையினை பெற்று வருகின்றனர்.

**Vanakkam with folded hands is our traditional way to extend respect and that is the best way to stay safe**

**மடிந்த கைகளைக் கொண்ட வனக்கம் மரியாதை செலுத்துவது நம் பாரம்பரிய முறையாகும் அதுவே சிறந்த பாதுகாப்பான வழி முறையாகும்**



## Santhi Small Group – Bujjireddipalli Village, Tiruvallur District

We the Small Group Members of Santhi Small Group from Bujjireddipalli Village, Thiruthani Centre, Tiruvallur Disrict have planted 1,031 redsander tree and 432 mango trees and following the best practices of TIST since three years by participating in TIST training programs and growing the trees in good manner with all the learnings from the training programs. In our tree grove we are practicing short time food crops like, groundnut, chilly and we are getting good income out of it. In addition, we have received Rs.3,545 as tree stipend from TIST for our live trees. We are participating in TIST Node Meetings and Training Meetings too. Our thanks to TIST India for encouraging us.

## சாந்தி சிறுகுழு - புஜ்ஜிரெட்டிபள்ளி கிராமம், திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி மையம் புஜ்ஜிரெட்டிபள்ளி கிராமம் சாந்தி சிறுகுழு உறுப்பினர்களாகிய நாங்கள் கடந்த மூன்று வருடங்களாக டிஸ்ட் நிறுவனத்திடம் இணைந்து 1,031 செம்மரக்கன்றுகள் மற்றும் 432 மா கன்றுகளை நடவு செய்து டிஸ்ட் இந்தியா தரும் பயிற்சி கூட்டங்களில் கலந்து கொண்டு சிறந்த முறையில் மரக்கன்றுகளுக்கு அவர்கள் தரும் ஆலோசனைகளை பெற்று நல்ல முறையில் மரக்கன்றுகளை வளர்த்துவருகின்றோம். மேலும் எங்கள் தோட்டத்தில் மரங்களுக்கிடையே ஊடுபயிராக வேர்கடளை, மிளகாய் போன்றவற்றை சாகுபடி செய்து நல்ல முறையில் மகசூலை பெற்று வருகிறோம். மேலும் இதனுடன் டிஸ்ட் இந்தியாவிடம் இருந்து ஊக்கத்தொகை ரூபாய் 3,545 பெற்றுகொண்டோம். மேலும் டிஸ்ட் இந்தியா நடத்தும் கணுக்கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டங்களில் கலந்து கொள்கின்றோம். எங்களை நன்கு ஊக்குவிக்கும் டிஸ்ட் இந்தியாவிற்கு நன்றியை தெறிவித்து கொள்கின்றோம்.

**Remember to be clean and safe always**

**எப்போதும் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதை நினைவில் கொள்ளுங்கள்**

